# ‘‘இளைஞர்களின் பயணத்தை இசையாக மொழிபெயர்த்தேன்!’’



ஆர்ப்பரிக்கும் வயலின்களோடும் அதிரும் தோல் வாத்தியங்களோடும் அடிமனதை வருடும் புல்லாங்குழலோடும் அற்புதமான குழல் வாத்தியங்களோடும் புதிய இசை படைத்திருக்கிறார் இசையமைப்பாளர் வித்யாசாகர்.

இது திரை இசை இல்லை. மலையாளப் பத்திரிகையான ‘மாத்ருபூமி’ மாநில அளவில் நடத்திய இளைஞர் விழா கலா உத்சவத்துக்கான ஸ்பெஷல் இது. பெயர் – ஸ்ட்டேட்ரியாட்டிஸ்.

புதிய முயற்சி என்பதால் மூன்று நாட்கள் முழுமூச்சாக உட்கார்ந்து இசைக் குறிப்புகளை எழுதி இரவு பகலாக ரிக்கார்டு செய்து கொண்டு போய் கலைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார். அதோடு நிகழ்ச்சியின்போது மேடையில் அவரே இசையை வழிநடத்தி இருக்கிறார்.

‘‘இது கொஞ்சம் மேற்கத்திய ஸ்டைல் இசைதான். ஆனால், அதிலும் நம் மண்ணின் மணம்.. குறிப்பாக கேரள வாசம் வீசும் வகையில் செண்டை, புல்லாங்குழல் எல்லாம் பயன்படுத்தியிருக்கிறேன்’’ என்று சொன்ன வித்யாசாகர், இந்த இசைக்காக ஒரு கதையை உருவாக்கியிருக்கிறார்.



வித்யாசாகர்

‘‘எதுக்குமே ஒரு கரு இருக் கணுமில்லையா? இது இளைஞர்கள் விழா. அதனால் என் இசை அவர் களைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டுமே. இளைஞர்களை நான் போராளிகளாகத்தான் பார்க்கிறேன். வெற்றி என்ற இலக்கை நோக்கி அவர் கள் முன்னேற ஆசைப்படுகிறார்கள். அந்தப் போராட்டத்தில் எத்தனையோ இடர்ப்பாடுகள் வரலாம். அப்போ தெல்லாம் அவர்களுக்குள் ஒரு சோர்வு வரும். அப்படிச் சோர்வு வரும் வேளை யில் சாய்ந்துகொள்ளத் தோள் தேடும். அதை

நான் காதலாக உருவகப் படுத்துகிறேன். அந்தக் காதலின் துணையோடும் கடவுளின் அருளோடும் வெற்றி இலக்கை அடைகிறது இந்த இளைஞர் கூட்டம். இந்தக் பயணத் தைத்தான் நான் இசையாக மொழிபெயர்த்துள்ளேன்'' என்றார்.

அந்த நிகழ்ச்சியில் அவரது இசைமொழி முடிந்ததும் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டியதை சிலிர்ப்போடு குறிப்பிட்டார் வித்யாசாகர்.

''இதென்ன.. சிம்பொனிக்கான முயற்சியா?'' என்றால் சிரிக்கிறார்.

''அதற்கு நீண்ட நெடுந்தூரம் போகவேண்டும். இது பயிற்சி என்றுதான் சொல்ல வேண்டும். சினிமா இசைக்கு நடுவே இசையை இன்னொரு கோணத்தில் அணுகும் வாய்ப்பு எப்போதாவதுதான் கிடைக் கும். கிடைக்கும் நேரத்தில் அதைக் கொண்டாட வேண்டுமே'' என்றார்.

''எல்லாம் சரி.. ஆனால், இதுமாதிரி முயற்சிகள் ஒரு நிகழ்ச்சியோடு முடிந்துபோய்விடுவது என்ன நியாயம்?'' என்றால்.

''இல்லை. இந்த இசை பன்னிரண்டு நிமிடங்கள் வரக்கூடியது. இதுபோல இன்னும் நான்கு ஐந்து இசைப் பதிவுகளைச் சேர்த்து தனி ஆல்பம வெளியிடுகிற முடிவில் இருக்கிறேன். இங்கே ஆல்பம் என்றாலே தனிப் பாடல்கள் என்றுதான் நினைக்கிறார்கள். அதனால் இந்த முயற்சி புதிதாக இருக்கும் என்று நம்புகிறேன்'' என்றார்.

எப்போ ரிலீஸ்?!